உ
கணபதி துணை

ரக்தாக்ஷி வருஷத்திய

# வெள்ளச்சேத சிந்து.

இஃது

கும்பகோணம், புஸ்தக ஷாப்.

R. கோவிந்தஸாமி நாயுடு அவர்கள்

காரியம்

S. P. கிருஷ்ணசாமி ருஜா அவர்கள்

இயற்றியது.

இரண்டாவது பாகம் சீக்கிரம் வெளிவரும்.

ஸ்ரீ கோமளாம்பா பிரஸ்,
கும்பகோணம்.

1924.

விலை] [1-அணா

28 AUG 192

O-,1MKR,R
N24.
181018.

உ

ஸ்ரீராமஜயம்.

# ரக்தாக்ஷி வருஷத்திய
# வெள்ளச் சேத சிந்து.

இதுவென்ன காலம்
ரக்தாக்ஷி வருடத்தின் கோலம்

சப்தமேகங்களும் ஒன்றாக நாடியே
சண்டமாருதமெனும் காற்றது கூடியே
ஒப்பில்லாமல் மழை வருஷித்ததாலேயே
உலகங்கள் கீழ்மேலாய் பொரண்டிட ஓடியே

மைசூரின் மேலே மலையாளம்
மறைந்ததினாலே

காவேரி கெங்கை பவானியும் சேர்ந்திட
கடல்பிரண்டது போலே தாவேரி பாய்ந்திட
மாமலை யானை மடிந்து மிதந்திட
மற்றுமனேக மரங்கள் முறிந்திட

வந்ததுமாரி ஜலமதி
பாய்ந்தது மீரி

அண்டங்களெல்லாம் கிடுகிடென்றாடிட
அடுத்த மலைகளெல்லாம் பிளந்து வெடித்திட
யெண்டிசையோர்களும் கண்டு நடுங்கிட
இந்திரனும் பயர் தேங்கியேனின்றிட

காவேரி மாது கொள்ள
டத்தினில் கலந்தாளப்போது

ஸ்ரீரெங்கம் வடக்காக கொள்ளிடம சென்றிட
திருச்சினாப்பள்ளியில் காவேரி சென்றிட

பாரெங்குமாக பயந்து நடுங்கிட
பாரிய கொள்ளடம் பாலமிடிந்திட

யென்னத்திலுள்ளம்
திருசிராபுரமெங்கும் வெள்ளம்

திருச்சிநாப்பள்ளியும் தண்ணீரில் முழுகுதாம்
தெருவெங்கும் ஜனங்களும் சென்று அழுகுதாம்
மருச்சி மலைகோட்டை மீதினிலேறுதாம்
மற்றுமுள்ள ஜனங்கள் சாப்பாட்டுகேங்குதாம்

இதுவென்ன மாயம்
திருச்சினாப்பள்ளி பிரஸ்தாபம்

வீடுவாசலெல்லாம் இடிந்து விழுந்துதாம்
விளையாடும் பிள்ளைகள் பசியினால் அழுகுதாம்
காடுமேடெல்லாம் கலந்து வருகுதாம்
கஞ்சி இல்லாமலே வெகுஜனம் சாகுதாம்

காவேரி மதகு வெடித்ததை
கண்டு அப்போது

ஸ்ரீரங்கத்திலிருந்து திருவானைக்காவெங்கும்
சேர்ந்து தண்ணீரது ஓங்கியது தங்கும்
ஜனங்கள் நடமாட முடியாதென்று அங்கும்
சாற்றுகிறார்களே ஜலப்பிரளயமெங்கும்

ஸ்ரீரங்கம் தொல்லை
ஜனங்கள் வெளிவரவுமே இல்லை

நாட்டு புரங்களெல்லாம் ஓட்டம்பிடிக்குதாம்
நஞ்சை புஞ்சைகளெல்லாம் பஞ்சாய்பறக்குதாம்
ஆடுமாடுகளெல்லாம் அடியோடு போனதாம்
அநேகஜனங்க ளழுதுகொண்டேங்குதாம்

இன்னமுங்கேளும் காவேரி
உடைப்பதை சொல்லுவேன் நானும்

அண்டக்குடிதனி லெடுத்தது உடப்பது
அதுவொரு காவேரியாக பிரண்டதும்
அடர்ந்த ஆலமர மெல்லாம் விழுந்ததும்
ஏகமாக சில ஊர்களழிந்ததும்

உடப்பது ஏகி சில ஊரில்
பாய்ந்தது மேவி

குருவைநாத்துக்களெல்லாம் தண்ணீரில்முழுகுதாம்
கொட்டின விரையெல்லாம் நாசமாய் போனதாம்
மருவில்லா சம்பாவின் நாற்றும் மடிந்ததாம்
மட்டில்லா விரைகளை கொட்டினார் ஜலமீது

எடுத்திட உடைப்பு
இன்னம்பூர் ஏராசம் சென்று

கல்லூர் கடிச்சம்பாடி வழியாக
திருவாம் கருப்பூர் ரதர்க்குவடக்காக
கூடில் வானம்பாடி சோழபுரம்மேக
கஞ்சநல்லூர் தாண்டி பந்தநல்லூர் போக

போனது மண்ணி
யொழியில்லானது தண்ணி

குருவை விளைந்திடும் குறைவில்லையென்றோரும்
கோரும் விலையதிகம் விற்கலா மென்றோரும்
விரும்பியே சோது கட்டலாமென்றோரும்
வீடு இடிந்ததை கட்டலாமென்றோரும்

எங்கிறுரைய்யா
இதுவென்னபாபமோபொய்யா

விடிந்ததுமவரவர் வீட்டுத்திண்ணையில்குந்தி
விசாரப்படுகுறார் காலைமாலை அந்தி
வடிந்ததும் விரைமுதல் இல்லையென்றேசந்தி
வட்டமதாகவே கூடிகூடியந்தி

எண்ணம்போலாமா
முன்னோர்களும் சொல்வழிபோமா

அரசலார் திருமலை ஆறதும் கூடியே
அடுத்தது மேல்புரம் உடைப்பது ஆகியே
இரச்சலா கவந்து சாக்கோட்டைக்கேகியே
யேகுதாம் நாச்சியார் கோவிலின் சாலையே

வலங்கைமான்போக
வழியதுஇல்லை முன்பாக

ஒரு ஊரிலிருந்தொரு ஊருக்கு போனவர்
வருகமுடியலை என்றுமேசொல்கிறார்
சரிவரசாலைக ளெங்கும்வழியில்லையாம்
சார்ந்தநகரெங்கும் இதுவொரு வதந்தியாம்

சேதிகள் வருதே அடடா
வெண்ணா வாதனை இதுவே

திருவையார் சிதம்பரம் திகிலடைந் திருக்குதாம்
சீக்கிரம் ஜனங்களும் வெளிபோக வேணுமாம்
மருவில்லாகு கலெக்டரின் உத்திரவான தாம்
மனம்நொந்து ஜனங்களும் வெளிபோகாதாகு தாம்

யென்னசகுதி உலகினில்
வந்தது கெடுதி

---

## கும்மி.

வல்லபமானபுகைவண்டி சங்கதி
சொல்லுகிறேன்கேளும் மானிடரே
அல்லல்அடைகிறதாம் ரயில்வண்டிக
ளானதுபோகவழி இல்லை யாம்

சென்னையிலிருந்துரயிலதுவும் இன்னம்
திரும்பிவந்ததுசேர வில்லை
உன்னதமானசிதம்பரத்தோ டது
ஓடுங்கின்றது பாருங்கடி

சிதம்பரம்மிருந்துமாயூரம் வந்து
சேராமல்ரயில்நின்றது வும்
இதம்பெறவுடப்பெத்தனமயி லே
யெடுத்துஉறைப்பேன்நான் கேளுங்கடி

ஆணிக்காரன்சத்திரமிருந்து வண்டி
அப்புறம்போகமுடியாதா ம்
பேணிப்பதுரயில்பாலத்தின்மேல் ஜலம்
பொரண்டுபோகுதாம்கேளுங் கடி

மாயூரமிருந்து கும்பகோண மட்டும்
வண்டிவந்துகொண்டு நின்றதுவே
மேவிய மேற்கே இரண்டு நாள் [வண்டி
போவதின் வேடிக்கையென்னென்று சொல்லு

தந்தி தபால்கூட இல்லாமல் ஜனம்
தொந்திரவதுவும் தானடைய
சுந்தரமாகவே வர்த்தகர் தங்களு—ம்
சோர்வு அடைகிறார் பாருங்க—டி

சேலம் செவ்வாய் பேட்டைதன்வழியாய்
ரயில் சேர வழியது இல்லையே———தாம்
ஆலபாக்கமாக வந்திடவும் ரோட்டை
அருத்து விட்டது பாருங்கடி

வண்டிவர வழி இல்லையென்று சில
வர்த்தகர்கள் கூடி தானியத்தை
மூண்டின விலையாய் விற்கலாமென்றவர்
மொழிந்து கொள்வதை கேளுங்கடி

யென்னத்தை சொல்லுவேன் நெல்லுவிலையது
யேரியே விற்குது பார்க்கையிலே
பன்னகசயனேன் தன் செயலால் வந்த
பான்மையை யென்னென்று சொல்லுவண்டி

பஞ்சம் வருமென்றுயேழைஜனங்களும்
மஞ்சு குருாதை பார்க்கயிலே
கஞ்ச மலறணி மாயோனுமவர்
கற்பனையால் வரும் பாருங்கடி

மதுரையில் வைகைதானுடைக்குமென்று
மற்றுமுள்ளோர் சிலர் சொல்லுகுறுர்
அதுவுமுடைத்து கொண்டு விட்டால்
வெகு ஆனந்தமாக இருக்குமடி

சாலைகளெங்கு முடப்பாச்சு
தபால்வண்டிகள் மோட்டார்கார் நின்றுபோச்சு
சாலவே ஒவ்வோர் கிராமதிகளும்
தயங்கியே நிற்கிறுர் கேளுங்கடி

வைத்தீச்வரன்கோவி லாணைதாண்டவபுரம்
மார்க்கத்தில் வெள்ள மதிகமென்று
யெதிர்த்தவெள்ளத்தினுல் ரயில்ரோட்டையு
மிடித்துவிட்டதாம் பாருங்கடி.

ஸ்ரீரங்கம் கோவிலில் மூன்றடி தண்ணீரும்
சென்றுமே நிற்குதாம் கேளுங்கடி
ஆரெங்கும் பார்க்க ஓரே வெள்ளமாகவே
அடர்ந்துவருகுதாம் பாருங்கடி

செங்கோட்டைகருகில் பூமிவெடித்து
தெரியலையாம் ரயில் பாதையது
மங்குதலாகவே தந்திமரங்களு
மறைந்ததென்குறுர் பூமியிலே

ஸ்ரீரங்கத்துக்கு யெதிரிலிருந்தி
களம்மாமண்டபம் போனதுவாம்
ஓரங்களாகவே பாதிஇடிந்து
விழுந்ததாசொல்குறுர் பாருங்கடி

மதுரைபட்டணம் வீதியெல்லாம்ஜலம்
மண்டிநெருங்கியே விட்டதுவாம்
இதுவரையினும் இந்தவெள்ளம்வந்த
தில்லையென்றே சிலர் சொல்லுகிறார்

ஈரோடுமெங்கும் ஜலம்பெருகிவெள்ளம்
யேகமாய் ரோட் டெல்லாம் நிற்கிறதாம்
தாராபுரத்திலு மவ்விதமாகவே
தவிக்கிறதாம் ஜனம் வெள்ளமதில்

---

## நொண்டிச் சிந்து

தென்னாடதில் வசிக்கும்-ஜனங்கட்கு-தெரிய உரைத்திடுவேன் தெளிவாக-அண்ணாந்துபார்த்தாலோ-பூமி ஆகாசமட்டும் ஜலமடந்ததுவே,—மைசூர் மலையாளம்-கொச்சிமதுரை-பாலக்காடது நிரைந்து—கோயமுத்தூர்ஜில்லா வெங்கும் குழப்பமதாகவே ஜலம் பெருகி—ஈரோடுமார்க்கம் வந்து கிழக்கே-இருந்திடும் ஜில்லா முழுதினுமே-பாவியேசூழ்ந்திடவும்-அங்கங்கே பாய்ந்து நதிகளெல்லாம் உடப்பெடுத்து—பெருஞ்சேதம் வந்துவிட்டது-இனிமேல் பின்னாலே-விரைப்பதற்கு-விரையுமில்லை-யென்ன செய்குவோமென்று - ஜனங்கள் யேங்கியே-நின்று மனதியங்கிடவே-சாப்பாட்டுக்கிருந்த நெல்லைவயலினில்-சாய்த்துவிட்டு ஜலத்தில் மாய்த்துவிட்டோம்—யெல்லாம் சிவன் செயலேயென்று யேற்றிடுவீர் நலம் போற்றிடுவீர் இரண்டாவது பாகம் சீக்கிரம் நேர்த்தியதாய் வரும் பூர்த்தியுடன். தன தன தன தன்னா.

முற்றிற்று.